ஆலங்குளத்தில் பெண்கள் பாலிடெக்னிக்.

*7755 **திரு. எஸ். எஸ். ராமசுப்பு :**

மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட **வினாவுக்கு** விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் பெண்கள் பாலிடெக்னிக் நிறுவப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் பகுதியில் எந்தவிதமான கல்லூரியோ அல்லது இதுபோன்ற பாலிடெக்னிக்கோ பெண்களுக்கு இல்லாமல் இருப்பதனால், அந்தப் பகுதியில் பெண்கள் படிப்பதற்கு ஒரு பாலிடெக்னிக் அமைத்துக் கொடுப்பது மிக அவசியமாக இருப்பதனால், அவசியம் அதை ஏற்படுத்த முடியுமா என்பதை அரசு அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

9-20 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு இரண்டுவிதமான விடைகள் வழங்கலாம். ஆலங்குளப் பகுதிபோல் தமிழ்நாட்டிலே 150, 200 பகுதிகளாவது இருக்கின்றன. இரண்டாவது இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாலிடெக்னிக்குகளுக்கு மேல் அதிகமாக ஏற்படுத்துவதற்கு அவசியமில்லையென்பது நிபுணர் குழுவினுடைய கருத்து. இப்பொழுது ஆண்டுதோறும் 22 ஆயிரம் மாணவர்கள் பாலிடெக்னிக்களிலே படித்து வெளி வந்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், அரசு பல ஆதாரங்கள் அல்லது சூழ்நிலைகளை வைத்து எந்த இடத்தில் பெண்களுக்கான, மகளிர்களுக்கான, பாலிடெக்னிக் ஒன்றிரண்டு ஏற்படுத்த முடியுமோ அவற்றை அவ்வப்போது பரிசீலிக்கும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காகத் தனியாக அமைக்காவிட்டாலும், ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிப்பது போலாவது ஒரு பாலிடெக்னிக் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்காக, குறிப்பாகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக அங்கே உள்ள தோட்ட முதலாளிகளுடைய சங்கம், நிர்வாகி

ளுடைய சங்கம் ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் தருவதாக முன் வந்திருக்கிறார்கள். அங்கே ஒரு பாலிடெக்னிக் தொடங்க ஏற்பாடு இருக்கிறது. அதேபோல் நிதி வருகிற வாயில் ஏதாவது தெரியுமானால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் ஏற்படுத்த முயற்சிக்கலாம்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள், தர்ம சிந்தனையுள்ள அமைப்புகள் போன்றவை தனியாக பாலிடெக்னிக் ஏற்படுத்த மனுச் செய்தால் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிறுவனத்தினுடைய வருமான வாயில்கள், அவர்களுக்குள்ள மொத்த செல்வ மதிப்பு அமைப்பு இவைகளைக் கருதிப்பார்த்து ஏற்க முடியுமானால், ஏற்கலாம்.

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் புதிய கிளை நிலையம் அமைத்தல்.

*224 திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவையாறு நகரில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் புதிய கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தகுந்த நிலம் கையகப்படுத்தப்பட்டதும், கிளை நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் சமீபத்தில் 3.0 ஏக்கர் புன்செய் நிலம் சத்திரம் நிறுவனத்தின் மூலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. சத்திர நிருவாகத்திடமிருந்து நிலத்தைப் பெற்று போக்குவரத்து கிளை நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.